## சுருக்கம்

தொழில் – 2015–2016–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – சேலத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் சுரங்க விரிவாக்கம் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கனரக லாரி ஒன்றும், தண்ணீர் தெளிப்பதற்கான லாரி மூன்றும், புல்டோசர் (Bull dozer) ஒன்றும் ரூ.1.86 கோடி செலவில் வாங்க ஆணை வெளியிடப்படுகிறது

---

தொழில் (எம்.எம்.இ.2) துறை

அரசாணை (டி) எண்.157

நாள் : 07–09–2015
மன்மத, ஆவணி திங்கள் 21,
திருவள்ளுவர் ஆண்டு, 2046

**ஆணை :**

2015–2016–ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> “சேலத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் சுரங்க விரிவாக்கம் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கனரக லாரி ஒன்றும், தண்ணீர் தெளிப்பதற்கான லாரி மூன்றும், புல்டோசர் (Bull dozer) ஒன்றும் ரூ.1.86 கோடி செலவில் வாங்கப்படும்”.

2. மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு மேக்னசைட் நிறுவன நிதியைக் கொண்டு குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்,
சேலம்–636 302.
நகல்
மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை–600 009.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை,
சென்னை–600 009.
இ.கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்